முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

Ar.O.P.No. 25/2024

நாள் : 02.08.2025

எ.ம.சா.1 திரு.பரமசிவன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

மனு சொத்தினை ஆர்ஜிதம் செய்த சமயத்தில் நான் சிறப்பு மாவட்ட அலுவலர் அலுவலகத்தில் பணியாற்றவில்லை என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட சமயத்தில், மனு சொத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்த சொத்தானது இராமநாதபுரம் டு நயினார்கோவில் ரோட்டிற்கு மிக அருகில் உள்ள சொத்து என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட சொத்திற்கு சந்தை மதிப்பின் படி விலை நிர்ணயம் செய்யவில்லை என்றால் சரியல்ல. சந்தை மதிப்பு என்பது வேறு, அரசு வழிகாட்டு மதிப்பு என்பது வேறு என்றால் சரிதான். அரசு வழிகாட்டு மதிப்பின் அடிப்படையில்தான் நிர்ணயம் செய்து இழப்பீடு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. சந்தை மதிப்பீடு தான் நிர்ணம் செய்து கொடுத்துள்ளோம். 29.03.2011 முதுல் 28.03.2012 வரையுள்ள காலக்கட்டத்தில் விற்பனை செய்யப்பட்ட சொத்தின் மதிப்பீடு செய்து கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அதன்படி 384 சொத்துக்கள் விற்பனை ஆனது என்றும், 42 இலக்க சொத்துக்கள் சந்தை மதிப்பை விட கூடுதலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக நிரூபண வாக்குமூலத்தின் பாரா 4ல் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். அதன்படி எ.ம.சா.ஆ.2ல் வரிசை எண்.254 மற்றும் 327 என்று குறிப்பிட்டுள்ள சொத்திற்கு ஒரு சதுர மீட்டருக்கு ரூ.3,229/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த தொகையானது நாங்கள் நியமனம் செய்த தொகையை

விட 5 மடங்கிற்கு மேல் உள்ளது என்றால் சரிதான். எதன் அடிப்படையில், ரூ.600/- நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் சந்தை மதிப்பின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டது. ஆர்ஜிதம் செய்த நிலத்திற்கு குறைவான தொகை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் குறைவான தொகையை நிர்ணயம் செய்து இழப்பீடு தொகை வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

நயினார்கோவில் டு இராமநாதபுரம் ரோடு பிரதான சாலை என்றால் சரிதான். அந்த ரோட்டிற்கு அருகில் உள்ள சொத்தின் மதிப்பு கூடுதலாக இருக்கும் என்றால் இருக்கலாம். சூரங்கோட்டை கிராமத்தின் ஒரு பகுதி இராமநாதபுரம் டவுன் உடனும், ஒரு பகுதி பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதியாகவும் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆர்ஜிதம் செய்யப்பட்ட சர்வே எண்.175/3 க்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளன என்றால் அந்த நேரத்தில் வீடுகள் எதுவும் கிடையாது. தற்போது கட்டப்பட்டிருக்கலாம். நான் எதை வைத்து சொல்கிறேன் என்றால் ஆவணத்தை வைத்து சொல்கிறேன்.

ஆர்ஜிதம் செய்யப்பட்ட மனு சொத்து நயினார்கோவில் ரோட்டிற்கு மிக அருகில் உள்ள சொத்து என்றும், அதன் மதிப்பு சென்ட் ஒன்றுக்கு ரூ.2,00,000/- மதிப்பீடு கொண்டது என்றும், நாங்கள் குறைவான மதிப்பீடு செய்து இழப்பீடு வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. இழப்பீடு தொகை அதிகம் வேண்டி மாவட்ட ஆட்சியரிடம் மனு தாக்கல் செய்து, அவர் அந்த மனுவினை முறையாக விசாரிக்காமல் தள்ளுபடி செய்துவிட்டார் என்றால் சரியல்ல. அதனால் மனு சொத்தின் மதிப்பு சென்ட் ஒன்றிற்கு ரூ.2,00,000/- மதிப்புடையது என்ற அடிப்படையில் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ளபடி மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க

கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/–ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .